## தூத்துக்குடி தொகுதி – வாகைக்குளம் சுங்கச்சாவடியில்

# நியாயமற்ற கட்டண முறையை தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

### மக்களவையில் – நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!



புதுடெல்லி, பிப்.14-

**தூத்துக்குடி - திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலை குறித்தும், வாகைக்குளம் சுங்கச்சாவடி குறித்தும் நாடாளுமன்றத்தில் தூத்துக்குடி மக்களவை உறுப்பினரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவரும், தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி எழுத்துப் பூர்வமாக கேட்டிருந்தார்.**

வாகைக்குளம் சுங்கச்சாவடியில் நூறு சதவீத சுங்கக் கட்டணம் வசூலித்த நிலையிலும், தூத்துக்குடி- திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலை (NH 138) யை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மோசமாகப் பராமரித்து வருகிறது. இதனால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் அறிந்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

வாகைக்குளம் சுங்கசாவடியில் நியாயமற்ற கட்டண முறையைத் தடுக்கவும் மற்றும் சாலையின் பராமரிப்பை உறுதி செய்யவும் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? அதற்காக செலவிட்டப்பட்ட தொகை எவ்வளவு? அதேபோல, வாகைகுளம் சுங்கச்சாவடி மூலமாக இதுவரை வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு?

வாகைகுளம் சுங்கச்சாவடி அதன் செயல்பாடுகளை தொடர கால அளவு ஏதும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா?" என்ற கேள்விகளை எழுப்பியிருந்தார் கனிமொழி கருணாநிதி.

இந்த கேள்விகளுக்கு ஒன்றிய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் ஜெய்ராம் கட்கரி அளித்த பதில் வருமாறு:-

"தேசிய நெடுஞ்சாலை 138இல் முக்கிய பராமரிப்புப் பணிகளான 50mm அடர்த்தியான பிடுமினஸ் மக்காடம்(DBM) மற்றும் 30mm பிடுமினஸ் கான்கிரீட்

(BC) ஆகியவை 2024 ஆகஸ்டில் நிறைவடைந்தன.

மேலும் போக்குவரத்தை சுலபப்படுத்துவது உள்ளிட்ட வழக்கமான பராமரிப்பு நடவடிக்கைகள் O&M நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, NH138 இன் தூத்துக்குடி - திருநெல்வேலி பகுதி போக்குவரத்துக்கு ஏற்ற நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

NH138 இன் தூத்துக்குடி - திருநெல்வேலி பிரிவுக்கான பயனர் கட்டணம் 2008-ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலை கட்டண விதிகளின் படியும், அதில் செய்யப்பட்ட திருத்தங்களின் படியும் வசூலிக்கப்படுகிறது.

திருநெல்வேலி - தூத்துக்குடி பிரிவின் NH138 இன் மேம்பாடு மற்றும் பராமரிப்புக்காக ஏற்பட்ட மூலதனச் செலவு 568.14 கோடி ரூபாய் ஆகும். இதில் தேசிய நெடுஞ்சாலைக் கட்டுமானத்திற்கான மூலதனச் செலவிற்காக வாங்கப்பட்ட கடன்களுக்கான வட்டி சேர்க்கப்படவில்லை.

மேலும், வாகைகுளம் சுங்கச்சாவடியில் பயனர் கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகை 219 கோடி ரூபாய் ஆகும்" என ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

---

# சென்னை - திருவண்ணாமலை இடையே வந்தே பாரத் ரயில்!

### மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கோரிக்கை!



திருவண்ணாமலை, பிப்.14-

தென்னகத்து கயிலாயம் என போற்றப்படும் திருவண்ணாமலை பஞ்ச பூத தலங்களில் அக்னி தலமாக அமைந்துள்ளது. எனவே, அண்ணாமலை யார் திருக்கோயிலை தரிசிக்கவும், கிரிவலம் சென்று வழிபடவும் தமிழ்நாடு மட்டு மின்றி வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். குறிப்பாக, கடந்த சில ஆண்டுகளாக திருவண் ணாமலைக்கு வரும் பக் தர்களின் எண்ணிக்கை பல மடங்காக உயர்ந்திருக் கிறது. எனவே, போக்குவ ரத்து வசதிகளை மேம்ப டுத்துவது அவசியமாகி உள்ளது.

எனவே, திருவண்ணாமலை எம்பி சி.என்.அண்ணாதுரை, மக்களவையில் தொடர்ந்து வலியுறுத்தி, ரயில்வே துறை அமைச்சரை பல முறை நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்கள் அளித்ததன் காரணமாக கடந்த ஒரு ஆண்டாக பவுர்ணமி நாட்களில் 2 சிறப்பு ரயில்கள் மட்டும் இயக்கப்படுகிறது. இந்நிலையில், திருவண்ணாமலை சென் னைக்கு தினசரி வந்தே பாரத் ரயில் இயக்க வேண்டும் என மக்களவையில் எம்பி அண்ணாதுரை கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக, கேள்வி நேரத்தின்போது அவர் தெரிவித்திருப்பதாவது:

திருவண்ணாமலை பிரசித்தி பெற்ற சிவாலயம் அமைந்த நகரம். இங் குள்ள அண்ணாமலையார் திருக்கோயிலை தரிசனம் செய்யவும், கிரிவலம் செல்லவும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர்.

எனவே, வந்தே பாரத் ரயில் சேவை திருவண்ணாமலை நகருக்கு மிக அவசியமாகும். ஆன்மிக சுற் றுலா பயணிக ளின் வசதிக்காக, சென்னை திருவண்ணாமலைக்கு வந்தே பாரத் ரயிலை இயக்க வேண்டும். அதேபோல், திருவண்ணாமலை தொகுதிக்கு உட்பட்ட ஜோலார்பேட்டை ஜங்ஷன் வழியாக தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு ரயில்கள் இயக்கப்படுகிறது. எனவே, சென்னை யில் இருந்து ஜோலார் பேட்டைக்கு வந்தே பாரத் மெட்ரோ ரயில் இயக்க ரயில்வே துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## வேலூர் மக்களவைத் தொகுதியில்

# தோல், ஜவுளித் துறை தொழில்களுக்கு போதிய நிதி உதவி தரப்படுமா?

### மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, பிப்.14-

வேலூர் மக்களவைத் தொகுதியில் தோல் மற்றும் ஜவுளித் துறை உள்ளிட்ட பல்வேறு MSMEகளுக்கு போதுமான நிதி உதவி தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக ஆதரவை ஒன்றிய அரசு அளித்துள்ளதா? என்று மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் குறிப்பாக வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் MSME துறை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை ஒன்றிய அரசு கூர்ந்து கவனித்துள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை?

வேலூர் மக்களவைத் தொகுதியில் தோல் மற்றும் ஜவுளித் துறை உள்ளிட்ட பல்வேறு MSMEகளுக்கு போதுமான நிதி உதவி தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக ஆதரவை வழங்க ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களைக் கொண்டிருக்கிறதா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ராஜாங்க அமைச்சர் ஷோபா கரந்த்லாஜ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு வேலூர் நாடாளுமன்றத் தொகுதி உட்பட நாட்டில் MSME துறை தொடர்பான சவால்கள் மற்றும் சிக்கல்களைத் தீர்க்க இந்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கைகளில் சில பின்வருமாறு:

i. 2020 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட MSMEகளை வரையறுப்பதற்கான புதிய திருத்தப்பட்ட அளவுகோல்கள்.

ii. வணிகத்தை எளிதாக்குவதற்கான MSMEகளுக்கான உதயம் பதிவு 1999 முதல். 01.07.2020.

iii. 2.7.2021 முதல் சில்லறை மற்றும் மொத்த விற்பனையாளர்களை MSMEகளாகச் சேர்ப்பது.

iv. MSMEகளின் நிலை உயர்ந்தால் வரி அல்லாத சலுகைகள் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும்.

V. முன்னுரிமைத் துறை நிலவரத்தின் கீழ் முறைசாரா மைக்ரோ நிறுவனங்களை முறையான வரம்பிற்குள் கொண்டு வருவதற்காக உதயம் உதவி தளம் 11.01.2023 அன்று தொடங்கப்பட்டது.

vi. MSMEகளில் பங்கு உட்செலுத்தலுக்கான சுயசார்பு இந்தியா நிதியை செயல்படுத்துதல்.

vii. MSMEகள் உட்பட வணிகங்களுக்கு ரூ. 5 லட்சம் கோடி அவசர கடன் வரி உத்தரவாதத் திட்டம். இந்தத் திட்டம் 31.03.2023 வரை செயல்பாட்டில் இருந்தது. அவசர கடன் வரி உத்தரவாதத் திட்டம் குறித்த பாரத ஸ்டேட் வங்கியின் 23.01.2023 தேதியிட்ட ஆராய்ச்சி அறிக்கையின்படி கிட்டத்தட்ட 14.6 லட்சம் MSME கணக்குகள் அவற்றில் சுமார் 98.3% கணக்குகள் குறு மற்றும் சிறு நிறுவன வகைகளில் இருந்தன. அவை செயல்படாத சொத்து வகைப்பாட்டிற்குள் நழுவாமல் காப்பாற்றப்பட்டன.

viii. உற்பத்தித் துறையில் MSMEகளுக்கான கடன் உத்தரவாதத் திட்டம் MSME கடனுக்கான புதிய மதிப்பீட்டு மாதிரி நெருக்கடி காலத்தில் MSMEகளுக்கான கடன் ஆதரவு மற்றும் முத்ரா கடன்கள் வரம்பை ரூ.10 லட்சத்திலிருந்து ரூ.20 லட்சமாக உயர்த்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை 2024-25 யூனியன் பட்ஜெட் அறிவித்தது.

தோல் மற்றும் ஜவுளித் துறை உள்ளிட்ட MSME துறைகளுக்கு தடையற்ற கடன் மற்றும் நிதி ஆதரவிற்காக தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவற்றில் பல திட்டங்கள் அடங்கும். அவற்றில் வங்கிக் கடனில் விளிம்பு பண மானியத்தை வழங்குவதன் மூலம் பண்ணை அல்லாத துறையில் புதிய நுண் நிறுவனங்களை அமைப்பதற்கான பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆலை மற்றும் இயந்திரங்கள் /உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கான நிறுவன நிதியில் SC/ST MSESகளுக்கு 25% மானியத்துடன் கூடிய சிறப்பு கடன் இணைக்கப்பட்ட மூலதன மானியத் திட்டம். நுண் மற்றும் சிறு நிறுவனங்களுக்கான பிணையமற்ற கடன்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டம். முறைசாரா நுண் நிறுவனங்களுக்கு ரூ.20 லட்சம் வரை பிணையமற்ற கடன்கள். PM விஸ்வகர்மா யோஜனா முத்ரா கடன் போன்றவை அடங்கும்.

செயல்முறைகளை நவீனமயமாக்குதல், வீணாவதைக் குறைத்தல், நிறுவனங்களின் வணிக போட்டித்தன்மையைக் கூர்மைப்படுத்துதல் மற்றும் அவர்களின் தேசிய மற்றும் உலகளாவிய அணுகல் மற்றும் சிறப்பை எளிதாக்குதல் ஆகியவற்றின் இறுதி நோக்கத்துடன் MSME சாம்பியன்ஸ் திட்டம் உருவாக்கப் பட்டது. மேலும் அமைச்சகத்தின் கீழ் உள்ள 18 தொழில்நுட்ப அறைகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் (தொழில்நுட்ப மையங்கள்) திறன் பயிற்சி அளித்து MSMEகளுக்கு உதவுகின்றன.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

---

## தமிழ்நாட்டைப் புறக்கணித்து

# ஏழை எளியோரை வஞ்சிக்கும் நியாயமில்லாத நிதிநிலை அறிக்கை!

### மாநிலங்களவையில் – கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா உரை!



புதுடெல்லி, பிப். 14 -

**ஒன்றிய நிதிநிலை அறிக்கை 2025 மீதான விவாதத்தில் "மக்களைப் பற்றி கவலைப்படாத ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை வெறும் கானல் நீர்" என்றும் "மிகச் சிறப்பாகச் செயல்படும் தமிழ்நாட்டை ஒன்றிய அரசு வஞ்சிக்கிறது" என்றும் மாநிலங்களவையில் கழக குழுத் தலைவர் திருச்சி சிவா உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா ஆற்றிய உரை வருமாறு : -

நிதிநிலை அறிக்கை என்பது வெறுமனே கணக்குகளின் அறிக்கை அல்ல. அது ஒரு தீர்மானம். அரசினுடைய கவனத்தில் எது முக்கிய பங்காற்றுகிறது என்பதை வெளிப்படுத்தும் அறிக்கை இது. இதுவே அரசின் செயல்பாட்டை விளக்குகிறது. நமது பிரதமர் இந்த நிதிநிலை அறிக்கையை வல்லரசு இந்தியாவுக்கு செல்வதற்கான பாதை என்று பெருமையுடன் விவரிக்கிறார். ஆனால் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் எண்கள் இந்த அறிக்கை வெறும் கானல்நீர் என்பதையே காட்டுகிறது.

திறமையாக களத்தில் உள்ள பிரச்சினைகளை மறைத்துவிட்டு இந்த நிதிநிலை அறிக்கையை வளர்ச்சியின் பிரகடனமாக ஒன்றிய அரசு அறிவிக்கிறது.

இந்த அரசு எப்போதும் வசதி படைத்தவர்களை மேலும் வசதியானவர்களாக மாற்றுவதிலேயே கவனம் செலுத்துகிறது. மாறாக ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மக்களின் வேலையின்மை, பணவீக்கம் மற்றும் குறைந்துகொண்டு பொருளாதார வாய்ப்புகள் பற்றி கிஞ்சிற்றும் கவலைப்படுவதில்லை.

**பொருளாதார வீழ்ச்சி!**

நிதிநிலை அறிக்கை 2025ஐ சமர்பித்ததற்காக நிதியமைச்சர் ஆளுங்கட்சியினரால் புகழப்படுகிறார். ஆனால் உண்மையில் நடப்பது என்ன? பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்கு பதில் வீழ்ச்சியடைந்து வருகிறது.

2019ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வாசிக்கும்போது தமிழின் சங்க இலக்கியம் புறநானூற்றில் இருந்து மக்களிடம் அதிகம் வரி வசூல் செய்த பாண்டிய மன்னன் அறிவுடை நம்பிக்கு பிசிராந்தையார் சொன்ன அறிவுரையை சுட்டிக்காட்டி நிதியமைச்சர் பேசினார். அதாவது விளைந்த நெல்லை அறுவடை செய்து யானைக்கு உணவாக கொடுத்தால், ஒரு சிறு நிலத்தின் நெல் போதும் ஆனால் அதுவே யானை தானே உணவைத் தேடி வயலுக்குள் வந்தால் அது உண்ணும் உணவைவிட அதன் காலால் மிதிபட்டு வீணாகும் உணவு அதிகம் என்பதுதான் அப்பாடல்.

அவ்வுண்மையை இப்போது நாங்கள் அனுபவப்பூர்வமாக உணர்கிறோம். செழித்து வளரும் மாநிலங்களின் பொருளாதார களங்களை மிதித்து மாநிலங்களின் வருமானத்தை நாசமாக்கும் யானைதான் ஒன்றிய அரசு!

விவசாயம் வளர்ச்சியடைந்திருக்கிறது என்றால் ஏன் ஒரு லட்சம் ட்ராக்டர்கள் டெல்லியின் எல்லையில் போராட வேண்டும்?

முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் சொன்னதுபோல, நாட்டின் 1% மக்கள் நாட்டின் 40.1% வளங்களை அனுபவிப்பதோடு அரசின் 26.6% வருமானத்தையும் பெறுகின்றனர். ஆனால் 50% ஏழை மக்கள் வெறும் 15% வருமானத்தையும் 6.4% வளங்களையும் பகிர்ந்துகொள்கின்றனர். இது முற்றிலும் முரணானது. இதற்கு நிதியமைச்சர் பதில் சொல்லியே தீரவேண்டும்.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கும் வெவ்வேறான அளவுகோளில் இந்த அரசு நிதியை பாரபட்சமாக பகிர்ந்தளிக்கிறது.

**குறைவான நிதி!**

தமிழ்நாடு அரசு நமது நாட்டின் மொத்த உற்பத்தியில் 9.04% பங்களிக்கின்றது. ஆனால் நமக்கு திரும்ப கிடைக்கும் பங்கு 4.08% மட்டுமே. 14வது நிதி ஆணைக்குழு 42% வரி பங்கீட்டை பரிந்துரைத்தது, 15வது நிதி ஆணைக்குழு அதை 41% ஆக அதை குறைத்தது, ஆனால் உண்மையில் 32% குறைவான நிதியே கிடைக்கின்றது.

மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், உத்தரபிரதேசம் 8.9% பங்களிப்பை அளிக்கின்றது, ஆனால் அது 17.94% நிதி பங்கீட்டை பெறுகிறது.

பிஹாரின் மொத்த உற்பத்தி பங்களிப்பு 2.87% ஆனால் அதற்கு 10.08% நிதி பங்கீடு அளிக்கப்படுகிறது. நாங்கள் அதிகமாக கொடுப்போம், ஆனால் அதில் பாதியளவுகூட கிடைக்கவில்லை.

ஒன்றிய அரசு கல்விக்கு மொத்த செலவில் 2.5% தான் ஒதுக்கீடு செய்கிறது, அதாவது 1,628 கோடி ரூபாய். எங்கள் மாநிலமான தமிழ்நாடு அரசு, மொத்த செலவில் 13.6% ஒதுக்கீடு செய்கிறது. தமிழ்நாடு அரசு கல்விக்கு செலவிடும் தொகை, ஒன்றிய அரசின் மொத்த கல்வி ஒதுக்கீட்டின் 40% ஆகும். நமது ஒதுக்கீடு 13.6% மற்றும் இந்த ஆண்டு அது 13.7% ஆக உயர்ந்துள்ளது. அதேபோல், சுகாதாரத்திற்கு ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்கிறதோ 1.89%.

12 லட்சம்வரை வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அதன் பயனாளர்கள் மொத்தம் ஒரு கோடி பேர். மீதமுள்ள 139 கோடி மக்களின் நிலை என்ன?

மக்களின் அடிப்படைத் தேவைகள் கல்வி மற்றும் சுகாதாரம்தான். ஆனால் அரசு மொத்த செலவினத்தின் 1.89% மட்டும் சுகாதாரத்திற்கு ஒதுக்கீடு செய்கிறது. ஆனால் எங்கள் தமிழ்நாடு அரசு மொத்த செலவினத்தின் 5.8% சுகாதாரத்திற்கு செலவிடுகிறது.

**விவசாயிகள் தற்கொலை!**

நாளொன்றுக்கு கிட்டத்தட்ட 31 விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கின்றனர். வேலையில்லா திண்டாட்டத்தினால் தற்கொலை செய்துகொள்பவர்கள் நாளொன்றுக்கு 9 பேர். மனிதக் கடத்தல்களினால் உயிரிழப்போர் நாளொன்றுக்கு ஆறு பேர். பட்டியலினத்தவர்களை வன்முறைக்கு ஆளாக்கும் வழக்குகள் 1,141, மாணவர்கள் தற்கொலைவழக்குகள் 36, சைபர் குற்றங்களில் 180 வழக்குகள் நாளொன்றுக்கு பதிவாகின்றன என ஆய்வுகள் சொல்கின்றன.

ஒருபக்கம் பெரும் கோடீஸ்வரர்கள் மேலும் கோடீஸ்வரர்களாகவும் மறுபக்கம் ஏழைகள் பரம ஏழைகளாகவும் ஆகிக் கொண்டிருக்கின்றனர். நான் தமிழ்நாட்டை பற்றி சொல்கிறேன்.

**தமிழ்நாடு மிகச்சிறப்பாகச் செயலாற்றுகின்றது!**

தேசிய அளவில் உயர் கல்விக்கு செல்லும் மாணவர்களின் சராசரி 27%, ஆனால் தமிழ்நாட்டில் உயர்கல்வி பெறுவோர் 47%. பல்கலைக்கழக மானியக் குழுவின் புது வரையறைகள் மூலம் இந்த ஒன்றிய அரசு எங்களை மேலும் வஞ்சிக்கவே முயற்சி செய்கிறது.

நீங்கள் வளர்ச்சி பற்றி பேசுகிறீர்கள். ஆனால் தமிழ்நாடு அரசாங்கம் பல ஆண்டுகளாக கேட்டுள்ள மெட்ரோ திட்டங்கள் மற்றும் சாலை திட்டங்கள் இங்கே குறிப்பிடப்படவில்லை. மேலும் ஒன்றிய அரசு நிர்வகிக்கும் திட்டங்களில் முன்பு 7525 என்ற விகிதத்தில் இருந்த பங்களிப்பை மாற்றி தற்போது ஒன்றிய அரசு 6040 விகிதத்தில் நிதியளிக்கிறது.

**உச்சபட்ச நிதி வசூல்!**

சிறு மற்றும் குறுதொழில் மூலம் மிக அதிகமான வேலைவாய்ப்புகள் வழங்குவதாக கூறப்படுகிறது. ஆனால், அவை மீண்டும் பெரும்பாலான கார்ப்பரேட் நிறுவனங்களாக மாறுவதற்கான முயற்சிகளும் ஒருபக்கம் நடப்பதாக குற்றம்சாட்டப்படுகிறது.

ஜி.எஸ்.டி. மூலம் சாதாரண மக்களிடம் இருந்து உச்சபட்ச நிதியை இந்த அரசு வசூலிக்கிறது. பெட்ரோலிய உற்பத்தி வரிகள் குறைக்கப்படவில்லை எனும் குற்றச்சாட்டையும் நான் இங்கே வைக்கிறேன்.

ஒவ்வொரு முறையும் நிதிநிலை அறிக்கையை ஆவலுடன் எதிர்நோக்கும் அத்தனை பேரையும் இந்த அறிக்கை ஏமாற்றியிருக்கிறது. இந்த அரசு மக்களை கைவிட்டுவிட்டது. நீங்கள் உங்களை மாற்றிக்கொள்ளவில்லை என்றால் மக்கள் உங்கள் ஆட்சிக்கு முடிவுரை எழுதுவார்கள் என்பதை நினைவூட்டுகிறேன்.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.

---

## காப்பீட்டு நிறுவன முகவர்

# மற்றொரு காப்பீட்டு நிறுவனத்தில் பணிபுரியலாம் என்ற விதியை மாற்றியது அரசுக்குத் தெரியுமா?

### மாநிலங்களவையில் – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி



நாமக்கல் பிப். 14 -

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் மாநிலங்களவையில் கேள்வி நேரத்தில். நிதித்துறை இணையமைச்சர் ஸ்ரீ பங்கஜ் சவுத்ரி அவர்களிடம் துணைக் கேள்வியை எழுப்பினார்.

a) ஒரு காப்பீட்டு நிறுவன முகவர் மற்றொரு காப்பீட்டு நிறுவனத்தில் பணிபுரியலாம் என்ற விதியை IRDA மாற்றியது அமைச்சகத்திற்குத் தெரியுமா?

b) இந்தச் சூழ்நிலையில், வணிகத்தையும் வேறொரு நிறுவனத்திற்கு மாற்றினால், இந்தச் செயல்பாட்டிற்கு LIC க்கு தான் மிகவும் பாதிப்பை ஏற்படுத்துகிறது..

c) இதனால் LIC பாதிக்கப்படும் என்று நீங்கள் நினைக்கவில்லையா? அரசின் கருத்தை அறிய விரும்புகிறேன் என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த ஒன்றிய நிதித் துறை இணையமைச்சர் ஸ்ரீ பங்கஜ் சவுத்ரி, இந்த ஒழுங்குமுறை சிக்கலை IRDA நிர்வகித்து வருகிறது. கொள்கை மாற்றங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை. தற்போதுள்ள கொள்கைகள் அமலில் இருக்கும் என பதிலளித்தார்.

---

# திருநெல்வேலி மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**திருநெல்வேலி மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளராக பணியாற்றி வரும் டி.பி.எம். மைதீன்கான் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு.மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ., (28ஏ/79, எம்.ஜி.பி. சன்னதி தெரு, பேட்டை, திருநெல்வேலி.) அவர்கள் திருநெல்வேலி மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.**

**ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13-02-2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

# திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றி வரும் டி.ஜெ.எஸ்.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு.எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ்** (188, டாக்டர் அம்பேத்கார் தெரு, வல்லூர், சென்னை.) **அவர்கள் திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.**

**ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13-02-2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.